கும்மிடிப்பூண்டி தொகுதியில் ரூ.400 கோடிக்கு திட்டப்பணிகளை நிறைவேற்றியதற்கு நன்றி!

கும்மிடிப்பூண்டி - ஊத்துக்கோட்டையில் புதிய நீதிமன்றம்!

சட்டப்பேரவையில் –டி.ஜெ.கோவிந்தராஜன் வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.8 - சட்டப்பேரவையில் கும்மிடிப்பூண்டி தொகுதி உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன், சட்டத்துறை மானியத்தில் பேசுகையில் கும்மிடிப்பூண்டி மற்றும் ஊத்துக்கோட்டையில் புதிய நீதிமன்றம் அமைத்திட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் சட்டத்துறை மானியக் கோரிக்கையில் கும்மிடிப்பூண்டி தொகுதி உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் பேசியதாவது :-

நீதி நிருவாகம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் மற்றும் சட்டத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுகின்ற நல்வாய்ப்பை எனக்கு வழங்கிய முதல்வர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி

உலகத்து உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன. அதேபோல், மக்கள் ஆட்சியாளர்களின் நல்லாட்சியை நம்பி வாழ்கின்றனர் என்னும் திருவள்ளுவரின் கருத்துக்கேற்ப மக்கள் விரும்பும் மாண்பமை பொருந்திய ஆட்சியை நடத்திவரும், திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு வெள்ளி விழா கொண்டாடி, இந்தியாவிலேயே கடல்மீது முதல் கண்ணாடிப் பாலம் அமைத்து வரலாறு படைத்தவருமான முதல்வர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். துணை முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், என்னுடன் சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், 50,938 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்து, இந்த சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த, கும்மிடிப்பூண்டி தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு பாடலின் வரிகள்

அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி
அதன் அருகினில் ஓலை குடிசை கட்டி
பொன்னான உலகு என்று பெயரும் இட்டால்
இந்த பூமி சிரிக்கும் அந்த சாமி சிரிக்கும்

அந்த வரிகளுக்கு உதட்டை அசைத்தவர்கள் அன்று கண்டுகொள்ளவில்லை. ஆனால், கலைஞர் அவர்கள் மாடி வீட்டின்கீழே கூரை வீட்டில் நீ தங்க வேண்டாம். நீயும் மாடி வீட்டிலே தங்கலாம் என்று குடிசை மாற்று வாரியத்தைக் கொண்டுவந்து கீழே இருந்தவர்களை மேலே தூக்கி அமைத்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள். கண்ணொளித் திட்டம்; அந்தக் காலத்திலே எல்லாம் கிராமப்புறத்திலே பார்த்தீர்களென்றால், கண்ணிலே பூச்சி வந்துவிட்டது, கண்ணிலே பூ வந்துவிட்டது, கண்ணிலே புரை வந்துவிட்டது என்று சொல்லிவிட்டு இனிமேல் எங்களுக்கெல்லாம் கண்ணே தெரியாது என்கின்ற சூழ்நிலையிருந்த காலத்தில், மருத்துவ வசதி அதிகமாக இல்லாத காலத்தில் கலைஞர் அவர்கள் கண் சிகிச்சைக்கு உரிய மருத்துவத்தைக் கொடுத்து அவர்களுக்குக் கண்ணாடி வழங்கி, கண்ணொளி வழங்கிய கலைஞர் அவர்கள், மகளிருக்கு சொத்திலே சம உரிமையைக் கொண்டு வந்தவர், பெண்கள் சுய உதவிக் குழுக்களை அன்றே தீர்மானித்து பெண்கள் வாழ்வாதாரத்திலே முன்னேற வேண்டும் என்பதற்காக பெண்களுக்கு சுய உதவிக் குழுக்களைக் கொண்டு வந்து, அவர்களுக்கு சுழல் நிதிகளைக் கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்திலே முன்னிலையைக் கொண்டு வந்தவர் கலைஞர் அவர்கள். மூவலூர் இராமாமிர்தம் ஏழைப் பெண்களின் திருமண உதவித் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலில் ஆரம்பித்து வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

எல்லோரும் சமமாக வாழ வேண்டுமென்று சமத்துவபுரம், உழவர் சந்தை, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் - நானும் ஒரு விவசாயத்தை சார்ந்தவன், இன்றைக்கும் விவசாயம் செய்துகொண்டிருப்பவன். விவசாயிகளெல்லாம் போராடினார்கள். எதற்காக போராடினார்கள், ஒரு unit-க்கு ஒரு காசு, இரண்டு காசு குறைக்க வேண்டுமென்று; அன்று ஒரே ஒரு பைசா குறைக்க வேண்டுமென்று அன்றைக்கு இருந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் கோரிக்கை வைத்து போராட்டம் நடத்தினார்கள். ஆனால், நடந்தது என்ன? நானும் அந்தப் போராட்டத்திலே சிறிய வயதிலே கலந்துகொண்டேன். எனக்கு வயதில்லை என்று என்னை விரட்டியடித்துவிட்டார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் தான் நீ ஒரு காசுக்காக ஏன் போராடுகிறாய் உனக்கு மின்சாரத்தையே இலவசமாகக் கொடுக்கின்றேன்

என்று கொடுத்து இன்றைக்கு விவசாயிகளினுடைய வாழ்வாதாரத்தை மேல்நோக்கி இருப்பவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருகின்றேன்.

விவசாயிகளின் நகைக் கடன் தள்ளுபடி!

நம்முடைய முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டின் முதல்வர் பொறுப்பேற்றவுடன், விவசாயிகளினுடைய கூட்டுறவுச் சங்கங்களில் பெற்ற விவசாயக் கடன்களை இரத்து செய்தார். விவசாயக் கடன்களை இரத்து செய்ததால்தான், ... (குறுக்கீடு)

இன்று விவசாயிகள் சிறப்பான முறையிலே விவசாயம் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, 40 கிராம் தங்கம், விவசாயிகள், ...

விவசாயிகளுடைய மனைவிகள் தங்கத்தையே அடமானம் வைத்து விவசாயம் செய்து, விவசாயத்திலே, நட்டம் பெற்றிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் அந்தத் தங்கம் வருமா, வராதா, கிடைக்குமா, கிடைக்காதா பெற்றுத் தருவார்களா என்று இருந்த நிலைமையை மாற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 40 கிராம் தங்கம் வங்கிகளிலே வைத்திருக்கக்கூடிய தங்கத்தை வட்டியுடன் சேர்த்து தள்ளுபடி செய்து, இன்றைக்கு பெண்கள் காதுகளிலே, மூக்குகளிலே, கம்மல் அணிந்து கொண்டிருக்கிறார்கள் என்றால், அது நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய எண்ணங்கள். மகளிர் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மக்களால் நான் மக்களுக்காகவே நான் என்று ஆட்சி அமைத்தவர்களெல்லாம் இருக்கின்றார்கள். ஆனால், முதல்வர் அவர்கள் மகளிருக்காக நான் மகளிருக்கான முன்னேற்றக் கழகத்தில் என்றும் நான் என்று ஆட்சியை அமைத்திருக்கின்றார்.

நம்மைக் காக்கும் 48 திட்டம்!

இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48 திட்டம்; ஒரு காலத்தில் சாலை விபத்து ஏற்பட்டால், கண்டுகொள்ளவே மாட்டார்கள் விட்டுவிட்டுச் சென்று விடுவார்கள். இன்றைக்கு அதை அறிந்த முதல்வர் அவர்கள், சாலை விபத்து ஏற்பட்டால், அவர்களைக் கண்டறிந்து, பக்கத்திலே இருக்கக்கூடிய மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றால், 48 மணி நேரம். அது அரசு மருத்துவமனையாக இருந்தாலும் சரி; தனியார் மருத்துவமனையாக இருந்தாலும் சரி; 48 மணி நேரம் அவருக்கு ஆகக்கூடிய செலவை அரசே ஏற்கும் என்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து அந்த விபத்துக்குள்ளான வரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்பவருக்கு ரூ.5,000/- கொடுக்கப்படும் என்ற திட்டத்தைக் கொண்டுவந்து இன்றைக்குப் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கக்கூடிய திட்டம் இந்தத் திட்டம்.

அதேபோல, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், நான் முதல்வன் திட்டம், முதல்வர் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம், முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் இந்தியாவில் முதன்முதலாக துவங்கப்பட்ட உடல் உறுப்பு தானத் திட்டம். அதைவிட ஒரு முக்கியமான திட்டத்தை இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரிலே அறிவித்திருக்கின்றார்கள்.

பெற்றோர்கள் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு 18 வயது வரை மாதந்தோறும் 2 ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய திட்டம் எவ்வளவு பெரிய திட்டம்; எவ்வளவு பெரிய சிந்தனை. குழந்தைகள் தாய், தகப்பனை இழந்துவிட்டால், அவர்களின் வாழ்வாதாரம் எப்படியிருக்கும் என்பதை ஒரு சாதாரண சாமனியனைப் போன்று நினைத்து, நம்முடைய முதல்வர் அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், ஏனாதி மேல்பாக்கம் என்கின்ற ஊராட்சியில் கணவனும், மனைவியும் வாகனத்தில் சென்றபோது, விபத்து ஏற்பட்டு மனைவி இறந்து விடுகிறார். மனைவி இறந்துவிட்ட நிலையில் கணவன் பத்து நாள் கழித்து பூச்சி மருந்தை அருந்தி தற்கொலை செய்து கொண்டார். நான் அந்தக் கிராமத்திற்குச் சென்று அவர்களுடைய குழந்தைகளைப் பார்த்தேன். அவர்களுக்கு 3 பெண் குழந்தைகள், 1 ஆண் குழந்தை என 4 குழந்தைகள் உள்ளனர். அப்போது, இவர்கள் எப்படி வாழ்வார்கள் என்று நினைத்தேன். தாயுள்ளம்கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுக்கு மாதந்தோறும் 2 ஆயிரம் ரூபாய் கொடுத்து அவர்களைக் காப்பாற்றியிருப்பது இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கே ஒரு முன்னுதாரணமாக அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்.”

இவன் தந்தை இவனைப் பெற என்ன தவம் செய்தாரோ என பிறர் மகிழ்ந்து பாராட்டும் அளவிற்குச் சிறப்படைவதே மகன் தந்தைக்குச் செய்யும் நன்றிக் கடன் எனும் திருக்குறள் கருத்தினை உலகிற்கு உணர்த்திய நம் பாட்டனார் திருவள்ளுவர் கூற்றுக்கேற்ப, இவரின் நற்செயலை உலகமே வியந்து அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் துணை முதலமைச்சர் அவர்களுக்கு என் திருக்குறள் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துணை முதல்வர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பொறுபேற்றவுடனேயே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடனை வட்டியோடு இரத்து செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 30 ஆயிரம் கோடி ரூபாயை சுழல் நிதியாக வழங்கி, மகளிர் சுய உதவிக் குழுக்களின் மேன்மையை உயர்த்தியவர்.

மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைத்தல்; இது மிகவும் முக்கியமான விஷயம். அனைத்துக் கிராமங்களிலும் தற்போது விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய இளைஞர்கள் அந்த விளையாட்டு உபகரணங்களை பார்த்திருக்கவே மாட்டார்கள். தற்போது அனைத்துக் கிராமங்களிலும் விளையாட்டு உபகரணங்களை வழங்கி, விளையாட்டுத் துறைக்கு ஒரு மேன்மையை ஏற்படுத்தியிருக்கிறார் துணை முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதே போன்று, எனது தொகுதியில் கும்மிடிப்பூண்டி வட்டம், நேமளூர் பஞ்சாயத்தில் மினி விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு ஆணை வழங்கியிருக்கக்கூடிய துணை முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா அறிவாலயத்தின் கட்டடத்தில் இருக்கக்கூடிய செங்கல்லை உருவி விடுவேன் என்று சொன்னவர்கள் மத்தியில், ஒரேயொரு செங்கல்லால் கமலாலயத்தின் அஸ்திவாரத்தையே ஆட்டம் காணச் செய்தவர் நம்முடைய துணை முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நில ஆர்ஜித வழக்குகள் மாவட்டங்களிலுள்ள சார்பு நீதிமன்றங்களில் நடைபெறுகின்றன. சார்பு நீதிமன்றங்களில் நடைபெற்று வந்த அந்த வழக்குகளை தற்போது மாவட்ட நீதிமன்றம் மட்டுமே நடத்த வேண்டும் என்று சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால், மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள நில ஆர்ஜித வழக்குகள் தேங்கும் நிலையில் உள்ளன. எனவே, ஏற்கெனவே உள்ள பழைய நடைமுறையைக் கொண்டு வர வேண்டும் என்று சட்டத் துறை குறித்து கேட்டுக் கொள்கிறேன்.

புதிய நீதிமன்றம்!

பாலியல் மற்றும் ஆணவக் கொலை வழக்குகள் ஆகியவை தற்போது மாவட்ட நீதிமன்றங்களில் நடைபெற்று வருகின்றன. மாவட்ட நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் நிலுவையில் இருப்பதால், இவ்விரண்டு வழக்குகளையும் விசாரிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, மாவட்டத் தலைநகரங்களில் சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். அந்தச் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குகளை 6 மாத காலத்தில் முடிக்க வேண்டும் என்றும், பாலியல் வழக்கு குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும், ஆணவக் கொலை குற்றவாளிகளுக்கு மரண தண்டனையும் வழங்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கும்மிடிப்பூண்டி மற்றும் ஊத்துக்கோட்டை ஆகிய பகுதிகளில் புதிய நீதிமன்றங்களைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

புதிய நீதிமன்றங்கள் கட்டும்போது, எதிர்காலத்தை கருத்தில்கொண்டு, Sub-Court அமைத்திடும் வகையில் புதிய கட்டடங்கள் இருந்திட வேண்டும். மேலும் நீதிபதிகளுக்கு தனியறை, வழக்கறிஞர்களுக்கு தனியறை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

கும்மிடிப்பூண்டியில் புதிய கலைக் கல்லூரி - பாலிடெக்னிக் கல்லூரி!

ஒரே ஒரு நிமிடம். 20 நிமிடங்கள் காலம் கொடுத்திருக்கக்கூடிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் எனக்கு ஒரு நிமிடம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் நாயகர், முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய சிறப்பான ஆட்சியில் கும்மிடிப்பூண்டியில் பல்வேறு பணிகள் ஏறக்குறைய 400 கோடி ரூபாய் அளவிற்கு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அதற்கு சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற வகையில் என் நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகப் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன். ஆரணி ஆற்றின் குறுக்கே ஊத்துக்கோட்டை வட்டத்தில் மாம்பாக்கம் முதல் பணப்பாக்கம் வரை தடுப்பணை அமைக்க வேண்டும். இது நீண்டகால கோரிக்கை. ஏற்கெனவே மதிப்பீடுகளெல்லாம் செய்யப்பட்டு, தயார் நிலையில் இருக்கின்றது. ஆகவே, இந்தப் பணியினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், புதுவாயல், பெருவாயல் பகுதியில் தடுப்பணை கட்டித் தர வேண்டும். எளாவூர் ஏழு கண் பாலம் அருகில் ஒரு தடுப்பணை அமைத்தால், அதற்கடுத்து கடல் பகுதி வருகிறது. உப்புத் தண்ணீர் உள்ளே புகாமல் இருக்கும். அதற்குண்டான பணிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொன்னேரி தொகுதியில் இருக்கின்ற அரசு கலைக் கல்லூரிக்குதான் இங்கிருந்து நாங்கள் சென்று கொண்டிருந்தோம். எனவே, கும்மிடிப்பூண்டியில் ஒரு அரசு கலைக் கல்லூரியும், அதேபோல், ஒரு பாலிடெக்னிக் கல்லூரியும் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாபுரம் ஒன்றியத்தில், வடமதுரை, பேட்டைமேடு, இராமபுரம் கண்டிகை -வடமதுரை ஊராட்சியை மூன்றாகப் பிரித்துத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம் கிராமத்தில் கரையோரமாக 400 வீடுகள் இருக்கின்றன. அங்கே தடுப்புச்சுவர் அமைக்க வேண்டும். அதேபோல், பெரியபாளையம் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும். ஏனென்றால், அருள்மிகு ஸ்ரீபவானி அம்மன் திருக்கோயில் அங்கே இருக்கின்றது. அங்கே தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்களும் அதேபோல், விசேஷ நாட்களில் இலட்சக்கணக்கான மக்கள் வருகின்றார்கள். எனவே, அதனை பேரூராட்சியாக மாற்றி தாருங்கள்.

சி.எஸ்.ஐ. மருத்துவமனை!

அதேபோல், கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை ஆகிய இரண்டு மருத்துவமனைகளையும் தரமுயர்த்தி சரி செய்து தர வேண்டும். இன்னொன்று முக்கியமானது. 350-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் கும்மிடிப்பூண்டி தொகுதியில் இருக்கின்றன. ஆனால் அங்கே ஒரு ESI மருத்துவமனை இல்லை. தொழிலாளர்களுக்குண்டான மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். ஈகுவார்பாளையம், மாதர்பாக்கம், கண்ணன்கோட்டை, கவரைப்பேட்டை, ஆரம்பாக்கம் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை பழுது பார்த்து, சரியான வசதிகளை செய்துத் தர வேண்டும். அயநெல்லூர், நம்பாக்கம், பூவலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தித் தர வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

அரியத்துறை கோயில், கும்மிடிப்பூண்டி முருகன் கோயில், அதேபோல் புது கும்மிடிப்பூண்டி பாலீஸ்வரர் கோயில், அதேபோல், திருக்கண்டலம் திருக்கள்ளீஸ்வரர் திருக்கோயில் ஆகிய கோயில்களின் குளங்களை சீரமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் கீழ்முதலம்பேடு, அரியத்துறையில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக ஒரு சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள் :

மாளந்தூரிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரம் உள்ள மெய்யூர் வரை பேருந்து வழித்தடத்தை நீட்டித்து தர வேண்டும்.

ஆவடி பணிமனையிலிருந்து 580 பேருந்து வழித்தடத்தை கும்முடிப்பூண்டி வரை நீட்டித்து தர வேண்டும்.

பாடியநல்லூர் பணிமனையிலிருந்து 514 பேருந்தை ஏரிகுப்பம் வழியாக கல்பட்டு கிராமம் வரை நீட்டித்து தர வேண்டும். 583 பேருந்தை ஊத்துக்கோட்டையிலிருந்து திருபெரும்புதூர் வரை நீட்டித்து இயக்கிட வேண்டும். தடம் எண் 580M மற்றும் தடம் எண் 514 ஆகிய இரு பேருந்துகளை கல்பட்டு கிராமம் வரை நீட்டித்து இயக்கிட வேண்டும்.

பாடியநல்லூர் பணிமனையிலிருந்து இயக்கப்படும் 557 பேருந்தை கும்முடிப்பூண்டி முதல் பிராட்வே வரை நீட்டித்து குளிர்சாதன பேருந்துகளை (A/C Bus) இயக்கிடவும், மேலும் இப்பேருந்து வழித்தடத்தில் கூடுதலாக மகளிர் விடியல் பயணம் பேருந்துகளை இயக்கிடவும் வேண்டும்.

பொன்னேரி மற்றும் ஊத்துக்கோட்டை பணிமனைகளிலிருந்து டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் கிளாம்பாக்கத்திற்கு ஊத்துக்கோட்டை, பெரியபாளையம் கும்முடிப்பூண்டி, மாதர்பாக்கம், பொன்னேரி பகுதிகளில் இருந்து புதிய வழித்தடங்கள் இயக்கிட வேண்டும்.

பொன்னேரி பணிமனையிலிருந்து T 62 பேருந்தை மாதர்பாக்கத்திலிருந்து போந்தவாக்கம் கிராமம் வரை நீட்டித் தர வேண்டும்.

பொன்னேரி பணிமனையிலிருந்து T 32 பேருந்து மாநெல்லூர் செல்லாமல், பல்லவாடா இருந்து போந்தவாக்கம் வழியாக மாதர்பாக்கம் வரை செல்லும் வகையில் வழித்தடத்தை மாற்றித் தர வேண்டும். T 37 பேருந்து தேர்வாயிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரம் வரை கண்ணன்கோட்டை கிராமம் வரை வழித்தடத்தை நீட்டித் தர வேண்டும். வழித்தடம் எண் 113A மாதவரம் முதல் தேர்வாய் வரை நீட்டித்து இயக்கிட வேண்டம்.

கும்முடிப்பூண்டி வட்டம், ஆரம்பாக்கம் கிராமம் மற்றும் திருவள்ளூர் இடையே இயக்கபட்டு வந்த வழித்தடம் எண் 173 பேருந்தை மீண்டும் இயக்கிட வேண்டும்.

கும்முடிப்பூண்டி ஒன்றியம், நெல்வாய் ஊராட்சி - பாலேஸ்வரன் கண்டிகை, மற்றும் மேலக்கழனி - ராக்கம்பாளையம் போன்ற பகுதிகளுக்கு நியாய விலை பகுதி நேரக்கடைகள் அமைக்கவேண்டும்.

எல்லாபுரம் ஒன்றியம், திருக்கண்டலம் ஊராட்சி, அண்ணாநகர் மற்றும் இருளர் காலனி, தொளவேடு ஊராட்சி தொளவேடு காலனி, கன்னிகைப்பேர் ஊராட்சி, கிருஷ்ணாபுரம் கண்டிகை போன்ற பகுதிகளுக்கு நியாய விலை பகுதி நேரக்கடைகள் அமைக்க வேண்டும்.

கும்முடிப்பூண்டி அல்லது பெருவாயல் பகுதியில், நுகர்பொருள் வாணிபகழகத்திற்கென சொந்தமான கட்டடம் மற்றும் சேமிப்பு கிடங்கு அமைத்திட வேண்டும்.

திருக்கண்டலம் முதல் பூச்சிஅத்திப்பேடு கிராமங்களுக்கு இடையில் கொசஸ்தலை ஆற்றில் மேம்பாலம் அமைத்து தர வேண்டும்.

இவ்வாறு டி.ஜெ. கோவிந்தராஜன் பேசினார்.

தி.மு.க. மீனவர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

V - ஆம் பக்கத் தொடர்ச்சி

துணை அமைப்பாளர்கள் - 1) மா.வேல்ராஜ், 1/17, சிதம்பர நகர், விளாத்திகுளம். 2) மா.முனிஸ்வரன், 43, சிதம்பரநகர், விளாத்திகுளம். 3) முத்துப்பாண்டி சிதம்பரநகர், விளாத்திகுளம்.

புதூர் பேரூர்

அமைப்பாளர் - செ. கண்ணன், ரவுண்டம்மன் கோவில், 2 வது தெரு, புதூர் -628905

துணை அமைப்பாளர்கள் - 1) வீ. மகாலிங்கம், அண்ணா நெடுஞ்சாலை, புதூர் - 628905. 2) பா.அருண்குமார், சன் மார்க் சங்கத் தெரு, புதூர் - 628905. 3) செ.யுவராஜ், சன் மார்க் சங்கத் தெரு, புதூர் 628905.

எட்டயபுரம் பேரூர்

அமைப்பாளர் - ச.கந்தகுமார், 45, ஓடைக்கடை பஜார், 1வது தெரு, நடுவிற்பட்டி, எட்டயபுரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மு.செய்யது அலி, 28, புது அம்மன் கோவில் தெரு, நடுவிற்பட்டி, எட்டயபுரம். 2) ச. சாலமன், 2, உமறுபுலவர் தெரு, எட்டயபுரம். 3) மு.தங்க மாரியப்பன், 2/2, காளியம்மன் கோவில் தெரு, எட்டயபுரம்.

கடம்பூர் பேரூர்

அமைப்பாளர் - பா.வசந்த செல்வம், 56/2, அரண்மனை வீதி, கடம்பூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) கா.ரமேஷ், 21/2, கார்வி ரோடு, கடம்பூர். 2) ம.மகேஸ்வரன், 8/9, காளியம்மன் கோவில்தெரு, கடம்பூர். 3) இ.மாடசாமி, 34/9,நாரயணசாமிகோவில்தெரு, கடம்பூர்.

கயத்தார் பேரூர்

அமைப்பாளர் - செ.அந்தோணிச்சாமி, 12எ, சின்னபிள்ளையார் கோவில் தெரு, கயத்தார்.

துணை அமைப்பாளர்கள் - 1) பா.அந்தோணிசிங் ராஜ், 7/4, சந்தனமாதா கோவில் தெரு, ஆஸ்பத்திரி ரோடு, கயத்தார். 2) ஆ.திரவிய ராஜ், 9/4, ஆரோக்கியமாதா கோவில் தெரு, கயத்தார். 3) மு.லெட்சுமணன், 32, கட்டபொம்மன் தெரு, கயத்தாறு.

கழுகுமலை பேரூர்

அமைப்பாளர் - ம.ஞானச்சுடர், 10டி- பசும்பொன் நகர், கழுகுமலை - 628552, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சு.மாரிராஜ், 14, அரண்மனை வாசல்தெரு, கழுகுமலை - 628552, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம். 2) ரா.நடராஜன், 19, அம்பேத்கார் நகர், கழுகுமலை - 628552, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம். 3) சு.முனியாண்டிராஜ், 33,குமரேசன் நகர் - 1, கழுகுமலை - 628552, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

தூத்துக்குடி மாநகரம்

போல்பேட்டை பகுதி

அமைப்பாளர் - மா. கார்த்திக், 360, அழகேசபுரம்,1ம் தெரு, தூத்துக்குடி.

துணை அமைப்பாளர்கள் - 1) ச.பேச்சியம்மாள், 315, அம்பேத்கர் நகர், தூத்துக்குடி. 2) மு.கோமதி சங்கர், 131, அழகேசபுரம், தூத்துக்குடி. 3) மா.விக்னேஸ்வரன், 370, அழகேசபுரம், 1வது தெரு, தூத்துக்குடி. 4) கா.சுப்ரமணி (எ)பிரபு, 7/1, சுந்தரவேல்புரம் மேற்கு, தூத்துக்குடி. 5) இ.குமாரமுத்து, 45/2, முத்துகிருஷ்னாபுரம், 2வது தெரு, தூத்துக்குடி.

திரேஸ்புரம் பகுதி

அமைப்பாளர் - தா.இலையன்ஸ், 292எ, திரேஸ்புரம், தூத்துக்குடி.

துணை அமைப்பாளர்கள் - 1) லூ.ஸ்டார்வின், 4/183, லூர்த்தம்மாள்புரம், தூத்துக்குடி. 2) அ.ரொபிட்டன், 54-பி, ஜார்ஜ் தெரு, தூத்துக்குடி. 3) மா.மரியசிலுவை, பூபால்ராயர்புரம் தூத்துக்குடி. 4) வி.ரிச்சர்ட், 32, சின்னகடை தெரு, தூத்துக்குடி. 5) மு.முனிஸ்வரன், 281/150எ, மாதவநாயர் காலனி, திரேஸ்புரம், தூத்துக்குடி.

சண்முகபுரம் பகுதி

அமைப்பாளர் - பி.ஜெர்மாஸ், 24, வண்ணார், 2து தெரு, தூத்துக்குடி.

துணை அமைப்பாளர்கள் - 1) மோ.கபோ, 75, முத்து தெரு, தூத்துக்குடி. 2) ரா.வேல்மாரியப்பன், 29, பங்களா தெரு, தூத்துக்குடி. 3) பெ.ராமர், பாண்டுரெங்கன் தெரு, தூத்துக்குடி. 4) ச.செந்தில்குமார், 81, ராமசாமி தெரு, தூத்துக்குடி. 5) இ.மணிமுத்து, 71, ராஜமன்னர் தெரு, தூத்துக்குடி.

அண்ணாநகர் பகுதி

அமைப்பாளர் - கே.டைட்டஸ், டி4 மீன்வளக்கல்லூரி குடியிருப்பு, ஆசிரியர் காலனி, தூத்துக்குடி.

துணை அமைப்பாளர்கள் - 1) ரா.நரேஷ், 51, அண்ணா நகர், 2வது தெரு, தூத்துக்குடி. 2) செ.முத்துராம்குமார், 124சி.கே.வி.கே. நகர், முதல் தெரு, தூத்துக்குடி. 3) எம். ராமசந்திரன், 1ஜி/849, ராஜகோபால் நகர், 5வது தெரு, தூத்துக்குடி. 4) ஞா.ராபின்சன், 107/126/1எ, மில்லர்புரம், தூத்துக்குடி.

பிரையண்ட் நகர் பகுதி

அமைப்பாளர் - பி.செல்வம், 316/12, இந்திரா நகர், ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி - 3.

துணை அமைப்பாளர்கள் - 1) கெ.நிஷா, 269சி, கீதா ஜீவன் நகர், ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி - 3. 2) அ.ஷேக் முகமது, 316/18, ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி - 3. 3) மோ.குட்விண் மில்டன், 35/11, பிரையண்ட் நகர், 12 வது தெரு, தூத்துக்குடி - 3. 4) எ. பிரமிலஸ், 30எ, பாத்திமா நகர், 2வது தெரு, தூத்துக்குடி - 3. 5) எ. ரமேஷ், 316, ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி - 3.

முத்தையாபுரம் பகுதி

அமைப்பாளர் - எம்.மாரியப்பன், சுனாமிகாலனி, கேம்ப் -II, தூத்துக்குடி - 6.

துணை அமைப்பாளர்கள் - 1) குருசாமி, 1-5-4, முனியசாமி கோவில் தெரு, முத்தையாபுரம், தூத்துக்குடி - 5. 2) பி.மாரியப்பன், 128, சுனாமிகாலனி, கேம்ப்-II, தூத்துக்குடி - 6. 3) பி.பொன்ஹரிகான், 1/13, கீழத்தெரு, முள்ளக்காடு, தூத்துக்குடி - 5. 4) கே. சண்முகவேலாயுதம், 95, டைப் - I, பாரதி நகர், புதியதுறைமுகம், தூத்துக்குடி - 6. 5) என்.சுரேஷ், 4-25, தெரு, முத்தையாபுரம், தூத்துக்குடி - 5.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-04-2025.

டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. மீனவர் அணி.